1973 பிப்ரவரி 6]

மதுரை மத்திய சிறைக் கட்டடம்.

* 30 விஞ.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மத்திய சிறைச்சாலைக்கு போதுமான கட்டடங்கள் இல்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், கட்டடங்களை விரிவுப்படுத்த எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) கட்டட வசதியைப் பெருக்கும் பொருட்டு, பொதுப் பணித் துறையினரை கலந்துகொண்டு, திட்ட அமைப்புப் படம், மதிப்பீடுகளுடன் அனுகுமாறு மதுரை மத்திய சிறைக் கண்காணிப் பாளரை சிறைத்துறைத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரையில் உள்ள சிறைச்சாலை மத்திய சிறைச்சாலையானலும்கூட, ஜில்லா சிறைச்சாலைக்கு எந்த அளவுக்கு கட்டடம் இருக்கவேண்டுமோ அந்த அளவுக்கு கட்டடம் இருக்கவில்லை. அதற்கு அடுத்தாற்போலுள்ள அவுட் கார்டன் மட்டும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 9-வது பிளாக் பக்கத்தில் தோட்டத்திற்குப் பக்கத்தில் இடம் நிறைய இருக்கிறது. அதற்கு கட்டடம் கட்டுவதற்கு எவ்வளவு இந்த ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. எத்தனை ஆண்டுகளுக்குள் கட்டடம் விரிவு படுத்துவது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது தான் பிளான்ஸ் அண்டு எஸ்டிமேட்ஸ் கேட்கப்பட்டிருக்கிறது. அவை வந்ததற்குப் பின்னலே மற்ற விவரங்கள் பற்றி முடிவு எடுக்கப்படும்.

உடல் ஊனமுற்ருேருக்கு உதவித் தொகை

* 31 விஞ.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

பொருளாதார வசதி அற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அண்மையில் அமைக்கப் பட்டுள்ள உடல் ஊனமுற்ருேர் நல மாநில வாரியத்தின் குறிக்கோள் களில் ஒன்ருக, உடல் ஊனமுற்ருேர்க்கு நிதியுதவியளித்தல் என்பதை அரசு ஏற்கனவே சேர்த்துக்கொண்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, பொருளாதார வசதியற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கு மாதந்தோறும் எவ்வளவு உதவித் தொகை அளிக்கப்படுகிறது ? இப்போது அளிக்கப்படவில்லை என்றால் இனிமேலாவது அளிப்பதற்கு திட்டம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது எதுவும் வழங்கப் படவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த மாதிரி உடல் ஊனமுற்றவர்களுக்குத் தேவையான விசேஷ பயிற்சி அளித்து, தொழிலிலே ஈடுபடுத்தவதற்கு ஏதாவது பரிந்துரை இருக்கிறதா ? அப்படியானல் அதன் விபரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார் களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி சில அமைப்புகள் மூலமாக இந்த பயிற்சி கொடுக்கப்படுகிறது. அப்படி பயிற்சி அளிக்கும் நிறுவனங்களை ஊக்குவிக்கும் முகத்தான் ஆண்டுதோறும் விழா கொண்டாடி வருகிறோம். அப்படிப்பட்ட நிறுவனங்களில் சிறந்த நிறுவனங்களுக்கு பரிசுகளும் அளித்து ஊக்குவித்து வருகிறோம். உடல் ஊனமுற்றவர்களைத் தங்கள் நிறுவனங்களில் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளும் தனியார் நிறுவனங்களுக்கும் ஊக்க மளித்து வருகிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : தனியார் துறையிலே உடல் ஊன முற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதை சட்டப் பூர்வமாக அமுலுக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? தனியார் நிறுவனங்கள் உடல் ஊனமுற்றவர்களுக்கு விசேஷ சலுகை அளிக்க மறுப்பதால் அரசாங்கம் இந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியார் துறையிலே இப்படிப் பட்டவர்களுக்கு வாய்ப்பு கொடுத்து வருகிறார்கள். இது அவர்க ளாகவே முன்வந்து செய்கின்ற உதவி. ஆகவே, அரசாங்கம் அதிலே தலையிட முடியாது. இருப்பினும் மத்திய அரசாங்கம் இதுபற்றி பரிசிலித்து வருகிறது. முடிவு தெரிந்த பின்னல் மேற்கொண்டு பரிசிலனை செய்யலாம்

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, உடல் ஊன முற்றவர்களுக்கு செயற்கை உறுப்புகளை பொருத்துவதற்கு அரசாங்கச் செலவில் செயற்கை உறுப்புகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

1973 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உடல் ஊனமுற்ற எல்லோருக்கும் செயற்கை உறுப்புகள் பொருத்த முடியாது. சிலருக்குத்தான் பொருத்த முடியும். அந்த உதவியை இப்போது நம்முடைய மருத்துவ மனைகளில்கூட செய்கிறார்கள். மேற்கொண்டு "ப்ரொப்போசல்" ஏதாவது வருமானால் அதுபற்றி பரிசீலனைச் செய்யப்படும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : உடல் ஊனமுற்றவர்கள் பட்டதாரிகளாக இருந்தால், வேலை தேடி தருவதில் அரசாங்கம் தனிக் கவனம் செலுத்துமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உடல் ஊனமுற்ற எல்லோருக்கும் உதவி செய்ய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. பட்டதாரிகளாக இருந்தால் தனிக் கவனம் செலுத்தப்படும்.

திரு. சு. துரைசாமி : உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசாங்கத்தில் இப்போது வேலை வாய்ப்பு உதவி செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இனிமேலாவது அந்த வாய்ப்பு கொடுக்கப்படுமா ? குமாஸ்தா போன்ற வேலைகளில் உடல் ஊனமுற்றவர்கள் அமர்த்தப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த எந்த இடங்களில் வேலை வாய்ப்பு கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் கொடுக்க முயற்சி செய்கிறோம். முழுமையாக கொடுக்க முடியாது. அவர்களுக்கு பண உதவி செய்வதைப்பற்றி பரிசீலனை செய்து, உதவி செய்வதற்கு உடல் ஊனமுற்றோர் நல வாரியத்திற்கு உரிமை கொடுத்திருக்கிறோம். தனியார் துறைகளில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. வாய்ப்புள்ள இடங்களில் அரசாங்கத் துறைகளிலும் அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முயற்சி செய்யப்படும்.

குட்டை அமைப்புத் திட்டங்கள்

* 32 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் சித்திவினாயகர் கோவிலுக்கு அருகிலும் சீரங்கம்பாளையம் தாண்டாக்கவுண்டன்புதூருக்கு அருகிலும் குட்டைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?